ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2181/19 - 2020 ජූනි මස 24 වැනි බදාදා - 2020.06.24
*2181/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதிய 2084/06 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 193 ஆம் இலக்க 2018.06.20 ஆம் திகதிய காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளது. எனினும் அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமை இன்னும் பொறுப்பேற்கப் படவில்லை. ஆகையால் அச் சட்டத்தின் 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், 2018.08.14 ஆம் திகதிய 2084/06 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வரத்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 193 ஆம் இலக்க 2018.06.20 ஆம் திகதிய காணித் துண்டினை இக் கட்டளை மூலம் இரத்துச் செய்கிறேன்.*

எஸ். எம். சந்திரசேன,
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.*

*எனது இல : 4-3/15/2017/VE/469.*
*பிரதேச செயலாளரின் இல. : MUL/LND/2/ACQ/95.*
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,*
*"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,*
*ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,*
*2020, மாச்சு 12.*

**அட்டவணை**

*தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவில், கந்தபட பற்று சிறு பிரிவில், தித்தெனிபொத (இ.கி.வ. 130) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.12.27 ஆந் திகதிய MR/MLT/2017/626 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட கீழ்வரும் பெயர்களையும் விஸ்தீரணத்தையும் கொண்ட காணித் துண்டு :*

**1. துண்டு A - எட்டகெஹெல்வராவ - விஸ்தீரணம் : 0.9309 ஹெக்டயார்**

வடக்கு : வரண்ட கால்வாய் மற்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உரிமைகோரும் எட்டகெஹெல்வராவ ; கிழக்கு : காணி சீர்திருத்த ஆணைக்குழு உரிமைகோரும் எட்டகெஹெல்வராவ, வரண்ட கால்வாய் மற்றும் வீதி (பிச) ; தெற்கு : வரண்ட கால்வாய் மற்றும் வீதி (பிச) மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழு உரிமைகோரும் எட்டகெஹெல்வராவ ; மேற்கு : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உரிமைகோரும் எட்டகெஹெல்வராவ மற்றும் வரண்ட கால்வாய்.

*07 - 275*